## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

### 9th ஜூன் / June 2024 ஞா யிறு ஆராதனை

| | | |
|---|---|---|
| ✝ | **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. மெர்சி நோயல்**<br>Mrs. Mercy Noel |
| | **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| | **ஜெபம்**<br>Prayer | **திருமதி. மெர்சி நோயல்**<br>Mrs. Mercy Noel |
| ✝ | **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### என் தேவனே உம் மகத்துவக் கிரியைகள்

*1.என் தேவனே உம்*
*மகத்துவக் கிரியைகள்*
*என் உள்ளத்தை*
*ஜொலிக்கச் செய்யுதே*
*மேல் வானமும்.*
*திரள் நட்சத்திரமும்*
*மேலோனின் மா*
*வல்லமை காட்டுதே.*

***என் ஆத்துமாவே***
***தேவனைப் போற்றிடு***
***நீர் வல்லவர் மா வல்லவர்***
***என் ஆத்துமாவே தேவனைப்***
***போற்றிடு***
***நீர் வல்லவர் மா வல்லவர்***

*2. காடுகளும் கண் கொள்ளா*
*சிகரமும்*
*கவருதே, களிப்புண்டாக்குதே*
*பட்சிகளும் பாய்ந்தோடும்*
*நீரோட்டமும்*
*பாடுதே, பரவசமாக்குதே.*

*3. குமாரனை ஒரே பேறானவரை*
*குருசினில் குருதி சிந்தவே*
*அனுப்பிய மா அன்பின்*
*சொரூபியே*
*அறைந்தீரே என்*
*பாவம் போக்கிட*

*4.பேர் எக்காள சத்தம்*
*தொனித்திடவும்*
*எம்பெருமான் என்னை*
*அழைத்திட,*
*ஏகுவேனே எந்நாளும்*
*பாடுவேனே*
*நீர் வல்லவர். மா வல்லவர்*

| | | |
|---|---|---|
| ✝ | **மாறி வாசித்தல் 23ம் ஞாயிறு**<br>**"சங்கீதம் 67"** | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"தேவனே எங்களுக்கு இரங்கும்"**

Psalter Reading "Psalm 67"

| | | |
|---|---|---|
| ✝ | **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| | **துதி ஆராதனை**<br>Singspiration | |
| | **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| | **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ | **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### வா, பாவீ, மலைத்து நில்லாதே,வா.

**வா, பாவீ, மலைத்து நில்லாதே,வா.**

*1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்*
*றெண்ணித் திகையாதே*
*உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே.*
*உள்ளபடி வாவேன்*

*2. உன்றனுக்காகவே நானேயடி பட்டேன்.*
*உன் பாவத்தைச் சுமந்தேன்*
*சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்*
*தீர்த்து விட்டேன், பாவி, வா.*

*3. கொடிய பாவத்தழலில் விழுந்து*
*குன்றிப் போனாயோ?*
*ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,*
*ஒன்றுக்கும் அஞ்சாதே, வா,*

*4. விலக யாதொரு கதியில்லாதவன்*
*உலகை நம்பலாமோ?*
*சிலுவை பாவிகளடைக்கலமல்லோ?*
*சீக்கிரம் ஓடி வாவேன்*

*5. என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்*
*இகழ்ந்து தள்ளேனே;*
*மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே,*
*வாராயோ, பாவீ?*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்***
***யாத்திராகமம் 2 : 11 - 24***
Scripture Reading
Exodus 2:11-24
***திரு.பாபி ராஜரத்தினம்***
Mr. Bobby Rajaratnam

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை***

*1. இயேசுவை நம்பினோர்*
*மாண்டதில்லை*
*என்னென்ன துன்பங்கள்*
*நேரிட்டாலும்*
*சிங்கத்தின் வாயினின்றும்*
*இரட்சிப்பார்*
*பங்கம் வராதென்னை ஆதரிப்பார்*

**நெஞ்சமே நீ அஞ்சிடாதே**
**நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே**
**இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்**
**இன்னமும் காத்துன்னை நடத்துவார்**

*2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை*
*நம்புவதல்ல தம் ஆலோசனை*
*கோர பயங்கர காற்றடிக்கும்*
*கன்மலைமேல் கட்டும் வீடுநிற்கும்*

*3. விஸ்வாசத்தால் நீதிமான்*
*பிழைப்பான்*
*வறட்சி மிகுந்த காலத்திலும்*
*பக்தன் வலது பாரிசத்திலே*
*கர்த்தன் தாம் நிற்பதால்*
*அசைந்திடான்*

*4. இயேசுவின் நாமத்தில் ஜெயம்*
*பெற்றே*
*ஏகிப்பறந்திடும் பக்தரோடே*
*சேர்ந்தென்றும் வாழ்ந்திடும்*
*ஐக்யத்திலே*
*ஜெயகெம்பீரமே உனக்குண்டே*

*5. அங்கே அநேக வாசஸ்தலங்கள்*
*அன்பின் பிதா வீட்டில் ஜொலிக்குதே*
*நேர்த்தியான இடங்களில் உந்தன்*
*நித்தியபங்கு கிடைத்திடுமே*

***அறிவிப்புகள்***
Announcements

✝ மனப்பாட வசனங்கள்
Weekly Memory Verses
***யாத்திராகமம் 2 : 24 - 25***
Exodus 2:24 - 25
***சபையார் இணைந்து***
Congregation

***24. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்.***
***25. தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**